**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 3 (LW 4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.திலகம் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | அரசு பகுப்பாய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2025.

( 6-வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS மனு அனுமதிக்கப்பட்டது.)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை

1. நான் அரசு பகுப்பாய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 08.11.2013 அன்று ஆய்வு கூடத்தில் பெறப்பட்ட மாதரி பெயர் Naco Max Capsuls Batch No.NM003 தயாரிப்பு தேதி ஜீலை 2013. காலாவதி தேதி ஜீன் 2016. தயாரிப்பு நிறுவனம் Techno met. விலாசம் உறங்கான்பட்டி, மதுரை, தமிழ்நாடு. இம்மாதிரியை ஆய்வு செய்ததில் Amoxycilin 21.07 மி.கி(8.43%), மற்றும் ஒரு மூலப்பொருள் Dicloxacillin சோடியம் 20.37 மி.கி (8.15%) மேலும் இதில் லேபிலில் குறிப்பிடப்படாத மருந்து cloxacillin சோடியம் 246 மி.கி இருப்பது ஆய்வில் கண்டறிந்தேன்.

2. அதன் பகுப்பாய்வு அறிக்கை எண்.04182/D/2013-2014 எனவே இம்மாதிரியானது தரமற்றது மற்றும் போலி என்று அறிவிக்கப்பட்ட நாள் 20.01.2014 ஆகும். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.57 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மற்றும் மாதிரி SS/73/T/13 08.11.2013 அன்று Mangoferol Syrup Batch No:MF004 தயாரிப்பு தேதி ஜீலை–2013, காலாவதி தேதி ஜனவரி–2015,தயாரிப்பு நிறுவனம் Techno met. விலாசம் உறங்கான்பட்டி, மதுரை, தமிழ்நாடு என்பதை ஆய்வு செய்ததில் மூலப்பொருள் L–Lycin Mono XL 10.1 மி.கி, (67.33%), Folic Acid 0.3 மி.கி (38%). எனவே மேற்கண்ட ஆய்வுக்கு உட்படுத்த பொருட்கள் தரமற்றவை என்று அறிக்கை கொடுத்தேன். அது அ.த.சா.ஆ.110 ஆக உள்ளது.

3. மாதிரி எண்.SS/68/T/13, மாதிரி பெயர் Diltus Syrup என்ற பொரும் தரமற்றவை என்று அறிக்கை கொடுத்தேன். அது அ.த.சா.ஆ.121 ஆக உள்ளது. முதல், 2–வது ஐட்ட நிறுவன அளவு 250 மி.கி ஆகும். அதில் 3–வது ஐட்டத்தின் நிறுவன அளவு சொல்லவில்லை. அதனால் அது போலி மருந்து என தெரிய வந்தது. 2–வது மாதிரியில் 3–வது மற்றும் 5–வது ஐட்டம் நிறுவன அளவு 15 மி.கி, 1 மி.கி. 3–வது மாதிரியில் 1–வது, 2–வது, 3–வது ஐட்ட நிறுவன அளவு 30, 2, 50 மி.கி. என்னை மருந்தாய்வாளர் விசாரித்தார்.

**2–8 எ.த.கு.வி**

| | |
|---|---|
| கேள்வி | பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட படிவம் 18–ல் மருந்துகளின் மருந்து நிறுவனம் மற்றும் உரிமம், காலாவதி தேதி, தயாரிப்பு தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் அனுப்பிய பகுப்பாய்வு அறிக்கையில் தவறாக முத்திரை குத்தப்பட்டது என குறிப்பிட்டுள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | மருந்து பொருளை பகுப்பாய்வுக்கு எடுக்கும் போது அதன் தரம் பற்றி தெரிய வாய்ப்பு உள்ளதா என்றால்? |
| பதில் | வாய்ப்பில்லை. |
| கேள்வி | பகுப்பாய்வு செய்த பிறகு தான் தரம் பற்றி தெரிய வரும் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் பதவிக்கு கீழ் எத்தனை பணியாளர்கள் இருந்தனர்? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | உங்கள் ஆய்வுக்கு வரும் மருந்து பொருட்களை உங்களுக்கு கீழ் பணிபுரிந்த இளநிலை மற்றும் முதுநிலை பகுப்பாய்வாளர்களுக்கு தான் பகுப்பாய்வுக்கு கொடுத்தீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். என் கண்காணிப்பில் நடைபெறும். |
| கேள்வி | பகுப்பாய்வை நீங்கள் நேரடியாக செய்யவில்லை என்றால் ? |

| | |
|---|---|
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் பகுப்பாய்வு செய்து தவறு கண்டுபிடித்த பின் நிர்வாக ரீதியாக நடவடிக்கை எதுவும் எடுப்பீர்கள் என்றால் ? |
| பதில் | அது என் பணி அல்ல. |

1–வது எ.த.கு.வி :இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.02.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.02.20 18:52:09 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

20.02.2025.